**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

O.S.No.141/2014 பெயர் : சரோஜா நாள் : 20.07.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால், தெரியும். எனக்கு 84 சென்ட் பாத்தியம். நான் 1966-ம் ஆண்டில் நாகராஜ பண்ணாடிக்கும், முத்துசாமி பண்ணாடி, பழனி பண்ணாடி ஆகியோருக்கு இடையே பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால், சரிதான். அதில் பழனி பண்ணாடிக்கு ஒரு பங்கு வந்துள்ளது என்றால், சரிதான். பழனி பண்ணாடியின் அப்பா பெயர் தெரியாது. பாண்டி பண்ணாடியின் அப்பா பெயர் பழனி பண்ணாடி. வாதி எனக்கு சித்தப்பா முறை ஆவார். 29.06.1973-ல் என் அப்பாவிடமிருந்து வாதி தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்றுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். கிரையம் செல்லாது என்று நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நாகராஜ பண்ணாடி எனது தந்தை எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் (வா.சா.ஆ.2) பாகம் கேட்கும் விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும், ஆனால் என் தந்தை கிரையம் செய்யவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் நம் இருவருக்கும் முத்துசாமி பண்ணாடியால் 1966 செப்டம்பர் மாதம் 21-ம் தேதி எழுதி வைத்த சார்பதிவாளர் அலுவலக பத்திரப்படி பங்கு பாத்தியம் ஏற்பட்டது, அதை நான் நாளது தேதியில் கிரையம் செய்து வைப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால், என் அப்பா விற்கவே இல்லை. நாகராஜ பண்ணாடி பெற்ற கிரையத்தின் அடிப்படையில் பாகம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல.

பழனி பண்ணாடியினுடைய 4/1 பாகத்தை சேர்த்து அவருக்கு 3 பாகமும், எனக்கு 1 பாகமும் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். பழனி பண்ணாடி வாதிக்கு விற்ற பாகத்தையும் சேர்த்து அதிக பாகம் கேட்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால், சரியல்ல. வாதி கோரியுள்ளபடி வழக்கு அனுமதிக்கத்தக்கது என்று சொன்னால், சரியல்ல.